
| Your Score Out of 20 marks | | |
|---|---|---|
| | | |
| | | |
| | | |
| | | |

Name : ______________ Class: P4___ Index No: ___

**TAMIL LANGUAGE** **Att:0hr 50min**

**COMPOSITION**

பின்வரும் படவரிசையைப் பார்த்து, 80 சொற்களுக்குக் குறையாமல் ஒரு கட்டுரை / கதை எழுதுக. கீழே கொடுக்கப்பட்டுள்ள உதவிச்சொற்களை உன் கட்டுரை / கதை எழுதுவதற்கு உதவியாகப் பயன்படுத்திக் கொள்ளலாம்.




| | |
|---|---|
| வகுப்பறையின் வெளியே | வகுப்பின் முன் |
| உற்சாகத்துடன் | ஆசிரியர் அழைத்தார் |
| திட்டமிட்டனர் | வெண்பலகையில் |
| நாற்காலியின் மீது | கேலி செய்து |
| வண்ணப்பசையை (poster colour) | சுத்தம் செய்தனர் |

# PRIMARY SCHOOL

# SECOND SEMESTRAL ASSESSMENT 2 - 2013

# TAMIL LANGUAGE

# PAPER 2

# PRIMARY 3

பெயர்: ______________________ (        )

வகுப்பு: P (            )

தேதி : ________________________

பெ.கை.: ______________________

சொற்பொருள் ( 5 ம.எ )

கீழ்க்காணும் வாக்கியங்களில் கோடிட்ட இடங்களை நிறைவு செய்வதற்குச் சரியான சொல்லைத் தேர்ந்தெடுத்து அதன் எண்ணை அடைப்புக் குறிக்குள் எழுது.

1. அரசன் **மீண்டும்** தேரில் ஏறி அரண்மனைக்குச் சென்றான்..

1. அன்றும் 2. எப்பொழுதும்
3. மறுபடியும் 4. பலமுறை

( )

2. என் ஆசிரியர் எனது **அன்னையிடம்** பேசினார்.

1. தாயிடம் 2. அண்ணனிடம்
3. தந்தையிடம் 4. அக்காவிடம்

( )

3. பாபு சிறந்த மாணவனாகத் **திகழ்ந்தான்**..

1. வந்தான் 2. பெற்றான்
3. உருவானான் 4. விளங்கினான்

( )

4. **பரி** வேகமாக ஓட்டப்பந்தயத்தில் ஓடுகிறது.

1. நாய் 2. புலி
3. சிறுத்தை 4. குதிரை

( )

5. நீ தேவதையைப் பற்றிய கதையைப் படித்து **வியப்பு** அடைந்தாய்.

1. பயம் 2. சுறுசுறுப்பு
3. சினம் 4. ஆச்சரியம்

( )

செய்யுள் ( 5 ம.எ )

கீழ்க்காணும் வாக்கியங்களில் கோடிட்ட இடங்களை நிறைவு செய்வதற்குச் சரியான சொல்லைத் தேர்ந்தெடுத்து அதன் எண்ணை அடைப்புக் குறிக்குள் எழுது.

6. இயல்வது ________________________.

1. மறவேல் 2. தேடேல்
3. கரவேல் 4. விலக்கேல்

( )

7. ________________________ இகழ்ச்சி.

1. ஏற்பது 2. மறப்பது
3. தருவது 4. கொடுப்பது

( )

8. எண்ணெழுத்து ________________________.

1. செய்யேல் 2. இகழேல்
3. விரும்பேல் 4. கூறேல்

( )

9. ஓதுவது ________________________.

1. ஒழியேல் 2. மறவேல்
3. பேசேல் 4. பழியேல்

( )

10. ________________________ இட்டு உண்.

1. உதவி 2. நன்மை
3. ஐயம் 4. அண்ணம்

( )

## வேற்றுமை உருபு ( 5 ம.எ )

கீழ்க்காணும் வாக்கியங்களில் கோடிட்ட இடங்களை நிறைவு செய்வதற்குச் சரியான சொல்லைத் தேர்ந்தெடுத்து அதன் எண்ணை அடைப்புக் குறிக்குள் எழுது.

11. தாத்தா ஒரு ______________________ பார்த்தார்.

1. பூனையை
2. பூனைக்கு
3. பூனை
4. பூனையோடு

( )

12. நாங்கள் ______________________ தண்ணீர் ஊற்றினோம்.

1. செடியிலிருந்து
2. செடியை
3. செடிக்கு
4. செடியுடன்

( )

13. அப்துல்லா ______________________ மெதுவோட்டம் ஓடினான்.

1. அப்பா
2. அப்பாவுடன்
3. அப்பாவை
4. அப்பாவுக்கு

( )

14. நான் ______________________ புறப்பட்டேன்.

1. வீட்டின்
2. வீட்டில்
3. வீட்டை
4. வீட்டிலிருந்து

( )

15. கிளி ______________________ பறந்தது.

1. பழத்துடன்
2. பழத்துக்கு
3. பழத்தில்
4. பழத்தை

( )

## தெரிவுவிடைக் கருத்தறிதல் ( 5 ம.எ )

**பின்வரும் பகுதியைக் கவனமாகப் படி.**

ஓர் ஊரில் ஓர் அரசன் இருந்தான். ஒருநாள் அவன் அரண்மனைத் தோட்டத்தில் ஒரு குட்டிக் குரங்கைக் கண்டு எடுத்தான். அன்று முதல் அவன் குரங்கை அன்போடு வளர்த்து வந்தான். அதனால் அந்தக் குரங்கு எப்போதும் அந்த அரசன் கூடவே இருக்கும். அரசன் சொல்லும் எல்லா வேலைகளையும் அந்தக் குரங்கு செய்யும். ஒரு நாள் அரசன் கட்டிலில் படுத்துத் தூங்கிக் கொண்டு இருந்தான். குரங்கு அவன் அருகில் நின்று ஒரு விசிறியால் விசிறிக்கொண்டு நின்றது.

அந்தச் சமயம் அங்கே ஓர் ஈ பறந்து வந்தது. அது அரசனின்மீது உட்கார்ந்தது. அதைக் கண்டதும் குரங்கு விசிறியால் அந்த ஈயை விரட்டியது. ஆனால் ஈ மீண்டும் மீண்டும் பறந்து வந்து மன்னனின்மீது உட்கார்ந்தது. அதனால், குரங்கிற்குக் கடுமையான கோபம் ஏற்பட்டது.

குரங்கு அந்த ஈயைக் கொல்ல நினைத்தது. அது அங்கு மாட்டப்பட்டிருந்த அரசனின் வாளை எடுத்து வந்தது. அவ்வேளையில் பார்த்து ஈ அரசனின் கழுத்தில் அமர்ந்து இருந்தது. குரங்கு ஈயைக் கொல்ல அதை நோக்கி வாளை வீசியது. அப்போது திடீரென்று மன்னன் விழித்துக்கொண்டான். வாள் தன் கழுத்தில் படும்முன் நகர்ந்து கொண்டான். ஆனால், ஈ அகப்படாமல் பறந்து விட்டது. குரங்கு செய்த முட்டாள் தனமான செயலை எண்ணி அரசன் அதைக் கோபமாகப் பார்த்தான்.

**சரியான விடையின் எண்ணை அடைப்புக்குறிக்குள் எழுது.**

16. அரசன் குரங்கை எங்கிருந்து எடுத்து வந்தான் ?

    1. தோட்டத்திலிருந்து.
    2. கட்டிலிலிருந்து
    3. அரண்மனையிலிருந்து
    4. மரத்திலிருந்து ( )

17. குரங்கு ஏன் அரசன் கூடவே இருந்தது ?

    1. அரசனுக்கு எல்லா வேலைகளையும் செய்து வந்ததால்
    2. அரசனுக்கு அன்போடு வளர்த்து வந்ததால்
    3. அரசனுக்கு வேலையாட்கள் இல்லாததால்
    4. அரசன் உதவி செய்யும்படி கூறியதால். ( )

18. குரங்கு எப்போது அரசனுக்கு விசிறியது ?

1. அரசன் ஓய்வு எடுக்கும்போது
2. அரசன் கட்டிலில் அமர்ந்தபோது
3. அரசன் கட்டிலில் தூங்கியபோது
4. அரசன் உணவு சாப்பிடும்போது ( )

19. குரங்கு ஏன் கோபம் அடைந்தது ?

1. ஈ மீண்டும் மீண்டும் அறையைச் சுற்றிப் பறந்தபோது
2. ஈ மீண்டும் மீண்டும் கட்டில் அருகில் வந்தபோது
3. ஈ மீண்டும் மீண்டும் குரங்கின்மீது அமர்ந்தபோது
4. ஈ மீண்டும் மீண்டும் அரசனின்மீது அமர்ந்தபோது

( )

20. குரங்கு எப்போது வாளை வீசியது ?

1. ஈ அரசனின் மூக்கின்மீது அமர்ந்தபோது
2. ஈ அரசனின் கழுத்தின்மீது அமர்ந்தபோது
3. ஈ அரசனின் உடலில் அமர்ந்தபோது
4. ஈ அறையில் பறந்தபோது ( )

முன்னுணர்வுக் கருத்தறிதல் ( 5 ம.எ )

சரியான விடையின் எண்ணை அடைப்புக்குறிக்குள் எழுது.

குமாருக்கு இன்று ஒன்பது வயது ஆகிறது. அவனுடைய குடும்பத்தினர் அவனுடைய 21._(______)_கொண்டாடினார்கள். அவனுடைய பெற்றோர் அவனுக்குப் புதிய ஆடையை வாங்கினர். பெரிய 22._(______)_ ஒன்றையும் வாங்கினர். அம்மா பலவிதமான 23._(______)_சமைத்தார்.

மாலையில் உறவினர்களும் நண்பர்களும் வந்தனர். எல்லாரும் அவனுக்கு 24._(______)_கொடுத்தார்கள். அவன் எல்லாருக்கும் நன்றி கூறினான். பிறகு மாலையில் குமார் கேக்கை வெட்டினான். அனைவரும் குமாருக்கு 25._(______)_கூறினார்கள். பின்னர் அனைவரும் உணவுகளை உண்டு மகிழ்ந்தனர்.

| | |
|---|---|
| 1. கேக் | 2. வாழ்த்து |
| 3. பரிசுகள் | 4. பழம் |
| 5. பிறந்தநாளை | 6. பூக்களை |
| 7. உணவுகளை | 8. செய்தி |

சரியான வினைச்சொல்லைத் தேர்ந்தெடுத்து எழுது.( 7 ம.எ )

26. மாணவர்கள் வகுப்பறையில் சத்தமாக ______________________.

27. முகிலன் பூங்காவில் மிதிவண்டி ______________________.

28. ஊர்க்காவலர் திருடனை ______________________.

29. காகம் தன் குஞ்சுகளுக்கு இரை ______________________.

30. பிரியா தன் தோழியுடன் ______________________.

31. ______________________ புத்தகம் படிக்கிறேன்.

32. ______________________ அறிவியல் நிலையத்துக்குப் போனோம்.

ஒலி வேறுபாடு ( 5 ம.எ )

சரியான சொல்லைத் தேர்ந்தெடுத்து எழுது.

33. கிளியின் ____________________ சிவப்பு நிறத்தில் உள்ளது.

( அலகு, அழகு )

34. உஷா குளிர் ____________________ அருந்தினாள்.

(பானம், பாணம் )

35. இப்பொழுது மணி ____________________ கேட்கிறது.

( ஒலி, ஒளி )

36. ____________________ பாம்புடன் சண்டை இட்டது.

( கீரி, கீறி )


37. என் அப்பா காவலராகப் ____________________ புரிகிறார்.

( பனி, பணி )

கருத்து விளக்கப்படக் கருத்தறிதல்

பின்வரும் விளம்பரத்தைக் கருத்தூன்றிப் படி;

# ரோகிணி சைவ உணவகம்



சிறப்புச் சலுகை
ஐந்து வயதுக்கும் கீழ்
உள்ள பிள்ளைகள்
பாதி விலையில்
உண்ணலாம்.

14, குட்டி இந்தியா சாலை, சிங்கப்பூர் 233361

தொலைபேசி எண் 62913538

## திறந்திருக்கும் நேரம்

காலை 8 மணி முதல்

வார நாள்களில் - இரவு 11 மணி வரை

வார இறுதி நாள்களில் & பொது விடுமுறை நாள்களில்

24 மணி நேர சேவை



- இலவச கார் நிறுத்தம் வசதி
- 100 பேருக்கு மேல் உணவு ஏற்பாடு - 30 % கழிவு

38 முதல் 40 வரை இடம்பெற்றுள்ள வினாக்கள் தரப்பட்டுள்ள விளம்பரத்தை அடிப்படையாகக் கொண்டு அமைந்துள்ளன. ஒவ்வொரு வினாவிற்கும் மிகப் பொருத்தமான விடையைத் தேர்ந்தெடுத்து அதன் எண்ணை அடைப்பினுள் எழுது. ( 3 )

38. பல வித சிறப்புச் சலுகைகளை வழங்குவது யார்?

(1) குட்டி இந்தியா சைவ உணவகம்
(2) மோகனா அசைவ, சைவ உணவகம்
(3) மோகனா சைவ உணவகம்
(4) குட்டி இந்தியா சைவ, அசைவ உணவகம்

( )

39. யார் பாதி விலையில் உணவு உண்ணலாம்?

(1) குடும்பத்தோடு வரும் எல்லாப் பிள்ளைகள்
(2) ஐந்து வயதிற்கும் குறைந்த பிள்ளைகள்
(3) குடும்பத்தோடு வரும் ஒரு பிள்ளை
(4) மூன்று வயதிற்கும் குறைந்த பிள்ளைகள்

( )

40. இந்த உணவகத்தில் எப்போது 24 மணி நேரமும் உணவு உண்ணலாம் ?

(1) பொது விடுமுறை நாள்களிலும் வார இறுதி நாள்களிலும்
(2) பொது விடுமுறை நாள்களிலும் வார நாள்களிலும்
(3) திங்கள் முதல் வியாழன் வரை
(4) எல்லா நாள்களிலும் ( )

சுயவிடைக் கருத்தறிதல் ( 10 ம.எ )

கீழ்க்காணும் பகுதியைக் கவனமாகப் படி. கீழே உள்ள கேள்விகளுக்கு பதில் எழுது.

பாலு இரண்டாம் வகுப்பில் படித்தான். ஒரு நாள் ஆசிரியர்கள் இரண்டாம் வகுப்பில் படிக்கும் மாணவர்கள் அனைவரையும் விலங்கியல் தோட்டத்துக்கு அழைத்துச் சென்றனர். அவர்கள் அங்குப் பேருந்தில் சென்றார்கள். மாணவர்கள் அங்குச் சென்றவுடன் ஆசிரியர்கள் நுழைவுச் சீட்டுகளை வாங்கினார்கள். மாணவர்கள் மகிழ்ச்சியுடன் இருந்தார்கள். அவர்கள் பல மிருகங்களைக் கண்டார்கள். அந்த மிருகங்களைப் பற்றி மாணவர்கள் தங்கள் புத்தகத்தில் எழுதிக் கொண்டார்கள். குரங்குகள் செய்த வேடிக்கைகளை மாணவர்கள் பார்த்தார்கள். அவர்களுக்குச் சிரிப்பு வந்தது. பிறகு அவர்கள் யானைக் காட்சியைப் பார்க்கச் சென்றனர். அங்கு இருந்த இருக்கைகளில் அமர்ந்தனர். பின்னர் யானைக் காட்சி ஆரம்பித்தது. மாணவர்கள் யானைகள் செய்து காட்டிய வித்தைகளைப் பார்த்தார்கள். மாணவர்கள் கைகளைத் தட்டினார்கள்.

பல நாடுகளிலிருந்தும் சுற்றுப்பயணிகள் அங்கு வந்திருந்தனர். அவர்களும் மிருகங்களை மிகவும் ஆர்வத்தோடு பார்த்தனர். அவர்கள் நிறைய புகைப்படங்களும் எடுத்தனர். பாலுவும் மற்ற மாணவர்களும் அங்குள்ள கடையில் சில பொருள்களை வாங்கினர். பிறகு மாணவர்களுக்கு மிகவும் பசியாக இருந்தது. அதனால் ஆசிரியர்கள் மாணவர்களை அங்குள்ள “மெக்டானல்” உணவகத்துக்கு அழைத்துச் சென்றனர். அங்கு மற்ற மாணவர்களும் உணவு வாங்கி உண்டனர். அவர்களுக்குக் களைப்பாக இருந்தது. அவர்கள் மீண்டும் பேருந்தில் ஏறி பள்ளிக்குத் திரும்பினார்கள்.

கேள்விகள்

41. பாலு யாருடன் விலங்கியல் தோட்டத்துக்குச் சென்றான் ?

________________________________________

________________________________________

42) மாணவர்கள் எப்படி விலங்கியல் தோட்டத்துக்குச் சென்றார்கள்?

________________________________________

________________________________________

43) மாணவர்களுக்கு ஏன் சிரிப்பு வந்தது?

________________________________________

________________________________________

44) யார் புகைப்படங்கள் எடுத்தனர்?

________________________________________

________________________________________

45) மாணவர்கள் ஏன் உணவகத்துக்குச் சென்றார்கள்?

________________________________________

________________________________________

P3

TESTPAPER 12

| | | | | |
|---|---|---|---|---|
| 1) 3 | 2) 1 | 3) 4 | 4) 4 | 5) 4 |
| 6) 3 | 7) 1 | 8) 2 | 9) 1 | 10) 3 |
| 11) 1 | 12) 3 | 13) 2 | 14) 4 | 15) 1 |
| 16) 1 | 17) 2 | 18) 3 | 19) 4 | 20) 2 |
| 21) 5 | 22) 1 | 23) 7 | 24) 3 | 25) 2 |

26) பேசினார்கள் 27) ஓட்டினான் 28) பிடித்தார்

29) ஊட்டியது 30) விளையாடினாள் 31) நான்

32) நாங்கள்

33) அலகு 34) பானம் 35) ஒலி 36) கீரி 37) பணி

38) 3 39) 2 40) 1

41) பானு ஆசிரியர்களுடனும் மாணவர்களுடனும் விலங்கியல் தோட்டத்திற்குச் சென்றான்.

42) மாணவர்கள் பேருந்தில் விலங்கியல் தோட்டத்துக்குச் சென்றார்கள்.

43) குரங்குகள் செய்த வேடிக்கைகளைப் பார்த்து மாணவர்களுக்கு சிரிப்பு வந்தது.

44) சுற்றுப்பயணிகள் புகைப்படங்களை எடுத்தனர்.

45) மாணவர்களுக்குப் பசித்ததால் ஆசிரியர் அவர்களை உணவகத்திற்கு அழைத்துச் சென்றார்.